Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 100% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Aug. 12 : 594 Nos.
  - Up to July 12 : 587 Nos.
- **Performance Aug. 12 ...**
  - Turnover growth : 4.7%
  - Employment growth : 5.49%
  - 100% Attendance : 17.03%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Pattern School)

## ACHIEVEMENT




## சிறந்த நெறிமுறைகள்

1. நல்லது செய்கிறவரை பாராட்டுவதில் சிக்கனம் வேண்டாம்.
2. ஒரு வீட்டை நிறைக்க ஒரு விளக்கு; உன் இதயம் நிறைக்க அன்பு என்கிற வெளிச்சம்.
3. தன்னைத்தானே புகழ்கிறவன் மறைமுகமாக பிறரை இகழ்கிறவன்.
4. நீ பார்க்கும் தொழில் எதுவாக இருப்பினும் நேசி; தொழில் தர்மம் மீறாதே.
5. நீ நல்லவன்... நீ நல்லவன் என்று பலமுறை சொன்னால் கெட்டவனும் நல்லவனாக நடக்க முயற்ச்சிப்பான்.
6. சாதித்து முடிக்கும் வரை குறைவாகவே பேசு. பேச்சு அதிகமானால் ஆற்றல் குறையும்.
7. பணம் இல்லாமல் வாழ்க்கை இல்லைதான்; ஆனால் பணமே வாழ்க்கை ஆகிவிடாது.
8. தீயோா் என்று யாருமில்லை; நீ நல்லவனாக இருக்கும் பட்சத்தில் உனக்கு எல்லோரும் நல்லவரே.
9. உழைப்பு மட்டுமே உன் வறுமை நீக்கி வளமை சேர்த்து மகிழ்ச்சியும் தரும்.
10. ஏமாற்றப்பட்டேன் என்று புலம்பாதே ஏமாந்து விட்டேன் என ஒத்துக்கொள்.
11. அத்தியாவசியத்திற்கு கடன் படலாம். ஆடம்பரத்திற்கு கடன்பட்டால் இருப்பதையும் இழக்க நேரிடும்.
12. சிக்கனம் உன் வாழ்வில் இருக்கட்டும். பிறருக்கு தாராளமாய் உதவி செய்.
13. ஒரு சொல் உன் வாயில் இருந்து வரும் முன் இரண்டு முறையாவது யோசி.
14. உனக்கு வரும் நோய்களிலேயே பெரிய நோய் எது தெரியுமா சோம்பல் மட்டுமே.
15. பிறிடம் எதிா்ப்பாா்க்கிறவன் எந்நாளும் உயா்வதில்லை.
16. வெற்றி என்ற கனி, விடாமுயற்சி என்ற மரத்தில் மட்டுமே காய்க்கும்.

தொகுத்தளித்தவா் : Ms. P.E. Nancy
Director – Admin

## மனிதனாக வாழ வழிகள்

மிகவும் மதிப்பிற்குரியவா்கள்------------------தாய், தந்தை
மிகமிக நல்லநாள்-----------------------------இன்று
மிகப் பெரிய வெகுமதி----------------------மன்னிப்பு
மிகவும் வேண்டியது-------------------------பணிவு
மிகவும் வேண்டாதது----------------------வெறுப்பு
மிகப் பெரிய தேவை-----------------------நம்பிக்கை
மிகக்கொடிய நோய்-------------------------பேராசை
மிகவும் சுலபமானது-------------------குற்றம் காணல்
தரமற்ற குணம்-------------------------பொறாமை
நம்பக்கூடாதது---------------------------வதந்தி
ஆபத்தை விளைவிப்பது--------------------அதிக பேச்சு
செய்யக்கூடாதது-----------------நம்பிக்கைத் துரோகம்
செய்யக்கூடியது----------------------------உதவி
விலக்க வேண்டியது------------------சோம்பேறித்தனம்
உயா்வுக்கு வழி---------------------------உழைப்பு
நழுவவிடக்கூடாதது-----------------------வாய்ப்பு
பிரியக்கூடாதது----------------------------நட்பு
மறக்கக்கூடாதது---------------------------நன்றி
ஒவ்வொரு நிமிடமும் இருக்க வேண்டியது------இறை பயம்.

Compiled by : Mr. M. Kumar
Design

## FUNCTIONAL WISHES



**Gandhi Jayanthi**
**2nd October**



**Ayudha Pooja**
**23rd October**



**Bakrid**
**27th October**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel : 044 - 22294565 |
| | M/s. Jeya Clinic, |
| | Tel : 98408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை
வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mrs. R. Jeyanthi**<br>Sub-Contract | **10th Oct** |
| **Mr. K. Venkatesan**<br>Fib Tec | **11th Oct** |
| **Mr. C. Suresh**<br>HHO – Production | **11th Oct** |
| **Mr. G. V. Gopal Rao**<br>Production | **16th Oct** |
| **Mrs. K. Easwari**<br>Coating | **21st Oct** |
| **Mr. R. Martin Richard**<br>Coating | **31st Oct** |

**Best Wishes from Tiaano Employees**

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

வறுமையான சூழலில் இருந்த அந்தச் சிறுவனுக்கு 10 வயது இருக்கும் போது அம்மா இறந்தார். அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் கிடந்த குடும்பச் சூழல் பத்திரிகையாளராக வேலை பார்த்தபோது, சில சாதனையாளர்களைப் பேட்டி காணும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு சராசரி மனிதன் பயன்படுத்தக் கூடிய வெற்றிச் சூத்திரங்களை உருவாக்க 500 சாதனையாளர்களைப் பேட்டி கண்ட அனுபவம் அந்த இளைஞனையும் சாதனையாளனாக வளர்த்தது.

அந்த இளைஞன்தான் நெப்போலியன் ஹில் யாருடன் இருக்கிறோம் என்பதைப் பொறுத்தே வாழ்க்கையில் வளர்கிறோம்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### மோரிஸ் குட்மேன் (நூலாசிரியர் மற்றும் சர்வதேசப் பேச்சாளர்)

என் கதை 1981 மார்ச் மாதம் 10ம் தேதி துவங்குகிறது. அந்த நாள் என் மொத்த வாழ்க்கையையும் மாற்றிவிட்டது. அந்த நாளை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.

நான் ஓட்டிக் கொண்டிருந்த விமானம் திடீரென்று விழுந்து நொறுங்கியது. உடலின் எப்பகுதியையும் அசைக்க முடியாத நிலையில் நான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். என் முதுகெலும்பு நொறுங்கியிருந்தது. கழுத்தருகே இருந்த முதல் இரண்டு தண்டெலும்புகள் உடைந்திருந்தன. விழுங்கும் திறன் பாதிக்கப்பட்டிருந்தது. சாப்பிடவோ குடிக்கவோ முடியாது.

என் உதரவிதானம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. என்னால் மூச்சுவிட முடியவில்லை. என்னால் செய்ய முடிந்ததெல்லாம் கண்களை இமைப்பது மட்டும்தான். நான் வாழ்நாள் முழுவதும் படுத்தப்படுக்கையாக இருக்க வேண்டியதுதான் என்றும், கண் இமைப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாது என்றும் மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

அது என்னைப் பற்றி ‘அவர்கள்’ கொண்டிருந்த பார்வை. அவர்கள் என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருந்தார்கள் என்பது குறித்து நான் கவலைப்படவில்லை. என்னைப் பற்றி ‘நான்’ என்ன நினைத்துக் கொண்டிருந்தேன் என்பதுதான் முக்கியம். நான் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பி மருத்துவமனையிலிருந்து ‘நடந்து’ வெளியே போவதை என் மனதில் ஒலிஒளிக் காட்சியாக வடித்திருந்தேன்.

மருத்துவமனையில் இருந்தபோது என் வசம் இருந்த ஒரே விஷயம் என்னுடைய மனம்தான். உங்கள் மனம் உங்கள் கைகளில் இருந்தால், நீங்கள் எதை வேண்டுமானாலும் சீர் செய்து விடலாம்.

எத்தருணத்திலும் தன்னம்பிக்கையை இழக்கக் கூடாது என்ற ஆழமான உண்மையை நம் அனைவருக்கும் உணர்த்துகின்றது மோரிஸ் குட்மேனின் வாழ்க்கைச் சம்பவம்.

Compiled by : Mr. Shahul Hameed Bava
Facilitation

## தெரிந்து கொள்வோம்

### தமிழ் மொழியின் பெருமை

உலகில் இருக்கும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை 6809 இவற்றில் 700க்கு உட்பட்ட மொழிகளில் மட்டும்தான் எழுதவும் பேசவும் முடியும்.

சொந்த வரிவடிவத்தில் எழுதப்படும் மொழிகள் வெறும் 100 மட்டுமே இவற்றுக்கெல்லாம் தாயாக, மூலமொழிகளாக திகழ்பவை 6 மொழிகள் என கண்டறியப்பட்டுள்ளது.

1. எபிரேய மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
2. கிரேக்க மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
3. இலத்தீன் மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
4. சமஸ்கிருத மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
5. **தமிழ்**
6. **சீன மொழி**

Compiled by : Mr. M. Sivakumar
Marketing

### பூ

1. குறிஞ்சிப்பூ 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும்.
2. லிம்பா 14 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும்.
3. காக்டஸ் 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும்.
4. லில்லி ஆண்டு முழுவதும் மலரும்.
5. பார்லி பூ மூன்று நிமிடங்கள் மட்டுமே மலர்ந்திருக்கும்.
6. மின்னல் மின்னும் போது தாழை மலரும்.
7. பாயா 150 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும்.
8. வேங்கை மலரில் வண்டுகள் மொய்க்காது.
9. உலகிலேயே மிகப்பெரிய பூ "ராப்லிசியா ஆர்னல்டை" இதன் அகலம் 3 அடி. இந்த பூவின் இதழ் ஒவ்வொன்றும் ஓர் அடி நீளம் இருக்கும்.
   இந்த பூவில் சுமார் 12 பாட்டில் அதாவது சுமார் 1 ½ கலன் தேன் இருக்கும். இந்த பூ சுமத்திரா தீவில் காணப்படுகிறது.
10. ஊட்டியில் குறிஞ்சிப் பூக்களில் ஒருவகையான மினியேச்சர் குறிஞ்சிப் பூக்கள் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மலரும். குறிஞ்சி பூக்களில் 13 வகைகள் உள்ளன.

Compiled by : Mrs. G. Kalaivani
Facilitation

### தனியாக இருக்கும் போது மாரடைப்பு வந்தால் உங்களை நீங்களே எப்படி காப்பாற்றிக்கொள்வது?

மாலை மணி 6.30 வழக்கம் போல் அலுவலகப் பணிகளை முடித்து விட்டு வீட்டிற்கு தனியாக சென்று கொண்டிருக்கிறீர்கள். அலுவலகத்தில் வேலை பளுவின் காரணமாக மற்றும் இதர சில பிரச்சனைகள் காரணமாக உங்கள் மனம் மிகவும் அழுத்தத்துடன் உள்ளது. நீங்கள் மிகவும் படபடப்பாகவும் தொய்வாகவும் உள்ளீர்கள் திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக வலி ஏற்படுவதை உணர்கிறீர்கள்.

அந்த வலியானது மேல் கை முதல் தோள்பட்டை வரை பரவுவதை உணருகிறீர்கள். உங்கள் வீட்டில் இருந்து மருத்துவமனை ஒரு ஐந்து மைல் தூரத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஆனால் உங்களால் அந்த ஐந்து மைல் தூரத்தை கடக்க முடியாது என உங்கள் மூளை உங்களுக்கு சொல்கிறது இந்த நேரத்தில் நம் உயிரை நாமே காக்க என்ன செய்யலாம்?

துரதிஷ்டவசமாக மாரடைப்பு ஏற்படும் போதெல்லாம் இறப்பவர்கள் அதிகமாக தனியாக இருந்திருப்பவராக உள்ளனர். உங்கள் இதயம் தாறுமாறாக துடிக்கிறது. நீங்கள் சுயநினைவை இழக்க வெறும் 10 நொடிகள் தான் உள்ளது. இப்போது நீங்கள் செய்ய வேண்டியது தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இரும்ப வேண்டும். ஒவ்வொரு முறை இரும்வுவதர்க்கு முன்னரும் மூச்சை இழுத்து விட வேண்டும் இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும்.

இருதயம் இயல்பு நிலை திரும்பும் வரையிலோ அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ ஒவ்வொரு இரண்டு நொடிக்கும் மூச்சை இழுத்து விட்டு இரும்மிக்கொண்டே இருக்க வேண்டும். மூச்சை இழுத்து விடுவதினால் நுரை ஈரலுக்கு ஆக்சிஜன் சீராக செல்ல வழி வகுக்கிறது. இருமுவதால் இருதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக் கொண்டே இருக்க உதவும். இதனால் இரத்தஓட்டம் சீரடையும்.

இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராக துடிக்கும். பின்னர் இருதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்லலாம்.

Compiled by : Mr. D.S. Anish
System Admin

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி XIII)

**நமக்குள் ஓர் அணில்**

இந்தப் பிரச்சனைக்கு அடிப்படைக் காரணம், மனிதனுக்குள் இருக்கிற ஓர் 'அணில் மனோபாவம்' தான்!

காட்டிலோ, நாட்டிலோ வாழ்கிற அணில்களின் பொதுவான பழக்கம் ஒன்று, உணவுக்காகக் கொட்டைகளைச் சேமித்து வைப்பது, மற்ற விலங்குகள் எல்லாம், அன்றைய பொழுதுக்கு உணவு கிடைக்கிறதா என்பதில் மட்டும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கையில், அணில் மட்டும் வருங்காலத்தைப் பற்றி யோசித்து, முன்னேற்பாடாகச் சேமிப்புக் கணக்கு ஒன்றைத் தொடங்கியிருக்கும்.

## கவிதைகள்

### Positive Against Negative

**HATE** has 4 Letters,
But so does **LOVE..,,**
**ENEMIES** has 7 Letters,
But so does **FRIENDS..,,**
**LYING** has 5 Letters,
But so does **TRUTH..,,**
**HURT** has 4 Letters,
But so does **HEAL..,,**
Transform every Negative energy
Into a Positive energy..!!
Its your perception that makes
the difference in the way you FEEL.

Compiled by : Mr. C. Abilash
Facilitation

### தானம் செய்!

அன்ன தானம் செய்,
நீ ஒரு மனிதன் ஆவாய்1
இரத்த தானம் செய்,
நீ ஒரு மகான் ஆவாய்1
நீ உலாவிய இவ்வுலகைவிட்டு
உன் உடலில் இருந்து உயிர் பிரியும் போது,
உன் உடல் உறுப்புகளை தானம் செய்!
நீ ஒரு தாய் ஆவாய்!

Compiled by : Mr. K. Balaji
Projects

### Self confidence

If you can't fly, then run.
If you can't run, then walk.
If you can't walk, then crawl.
But Whatever you do
You have to keep
Moving forwad.

Compiled by : Mrs. K. Shreemadhi
Receptionist

## சிந்தைனைக்கு

- புனைகதை அல்லது நிஜவாழ்க்கை எதுவாக இருப்பினும், திருத்தி மாற்றுவது என்பது ஒருபோதும் காலதாமதமான செயல் அல்ல.
- <u>உத்வேகம் அளிக்கும் மந்திரம்</u>
  அறிந்துகொள்வதற்கு எந்தவொரு விஷயமும், வெருஞ்சிறியதல்ல, முயற்சி செய்வதற்கு எந்தவொரு விஷயமும் மிகப்பெரியதல்ல.

Compiled by : K. Manivannan
Fib tec

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

அணில்களின் இந்தப் பழக்கத்தைப் பற்றிப் பல வேடிக்கைக் கதைகள், சம்பவங்கள் உண்டு.

'நார்னியா' என்ற கற்பனை தேசத்தைப் பின்னணியாக வைத்துச் சுவையான குழந்தைக் கதைகளை எழுதிய சி. எஸ். லூயிஸ், தனது 'பிரின்ஸ் காஸ்பியன்' (Prince Caspian) என்ற நாவலில், அணில்களின் சேமிப்புக் கிடங்குகளை ஒரு ரகசியக் கோட்டைபோல் வருணிக்கிறார்.

அதாவது, ஒவ்வோர் அணிலும் தன்னுடைய சேமிப்புகளை எங்கே ஒளித்து வைத்திருக்கிறது என்று மற்றவர்கள் யாருக்கும் தெரியாதாம். சக அணில்களுக்குக் கூட இந்த விஷயம் கசிந்து விடாதபடி, பரம ரகசியமாகத் தனது சேமிப்புக் கிடங்குக்குச் சென்று திரும்புமாம் அணில். அதை மற்றவர்கள் எட்டிப்பார்ப்பது, அசிங்கமாக. அவமானகரமாகக் கருதப்படுமாம்.

இத்தனை கவனத்துக்கும், ரகசிய நடவடிக்கைகளுக்கும் அடிப்படைக் காரணம், அணில்கள் எந்தச் சூழ்நிலையிலும் தங்களுடைய புதையல்களை இழக்க விரும்புவதே இல்லை.

மனிதர்கள் தங்களுடைய பணச் சேமிப்புப் பழக்கத்தை அணிலிடம் இருந்துதான் கற்றுக் கொண்டார்களா என்று தெரியவில்லை. ஆனால், அணில்களிடமிருந்து நமக்குத் தொற்றிக் கொண்டு விட்ட ஒரு கெட்ட பழக்கம், கண்டதையும் சேர்த்து வைப்பது.

அதாவது, எப்போதாவது பயன்படும் என்கிற நம்பிக்கையில், தேவையில்லாத பல பொருள்களைக் குப்பையாகச் சேர்த்து வைத்துக் கொண்டு அவதிப்படுவது.

'செய்ரி'யின் முதல் வில்லன் – இதுதான், இந்தப் பழக்கம்தான் இந்த அசட்டு நம்பிக்கைதான்!

தொடரும்…

## DECENNIAL STAFF DAY CELEBRATION ON 26TH AUGUST

